# இனிமையான குழந்தைகளே - பாபா உங்களுக்கு ஞானம் யோகத்தின் டானிக்கைக் கொடுத்து பலமாக (நன்றாக) உபசரிக்கின்றார், எனவே எப்போதும் மகிழ்ச்சியாக இருங்கள் மற்றும் ஸ்ரீமத் படி அனைவரையும் உபசரித்துக் கொண்டே செல்லுங்கள்

கேள்வி: இந்த சங்கமயுகத்தில் தங்களிடத்திலுள்ள அனைத்திலும் மதிப்புமிக்க பொருள் என்ன, அதை பாதுகாப்பாக வைக்க வேண்டும்?

பதில்: இந்த சர்வோத்தம பிராமண குலத்தில் தங்களுடைய இந்த வாழ்க்கை மிகவும் மதிப்புமிக்க தாகும், ஆகை யினால் சரீரத்தை கண்டிப்பாக பாதுகாக்க வேண்டும். இது மண்ணால் ஆன பொம்மை, இது அழிந்து விடட்டும் என்பது கிடையாது. இதை வாழும் வரை உயிருடன் பாதுகாக்க வேண்டும். யாராவது நோயுற்றார்கள் என்றால் சலித்துக் கொள்ளக் கூடாது. சிவபாபாவை நினைவு செய்யுங்கள், எந்தளவிற்கு நினைவு செய்வீர்களோ அந்தளவிற்கு பாவங்கள் அழிந்து கொண்டே செல்லும் என்று அவர்களுக்குச் சொல்லுங்கள். அவர்களுக்கு சேவை செய்ய வேண்டும், வாழ்ந்து கொண்டிருக்கட்டும், சிவபாபாவை நினைவு செய்து கொண்டே இருக்கட்டும்.

ஓம் சாந்தி. ஞானத்தின் மூன்றாவது கண்ணைக் கொடுக்கக் கூடிய ஆன்மீகத் தந்தை வந்து ஆன்மீகக் குழந்தைகளுக்குப் புரிய வைக்கின்றார். ஞானத்தின் மூன்றாவது கண்ணை பாபாவைத் தவிர வேறு யாரும் கொடுக்க முடியாது. இப்போது குழந்தைகளாகிய உங்களுக்கு ஞானத்தின் மூன்றாவது கண் கிடைத்துள்ளது. இந்த பழைய உலகம் மாறப்போகிறது என்பதை குழந்தை களாகிய நீங்கள் தெரிந்துள்ளீர்கள். மாற்றக் கூடியவர் யார் மற்றும் எப்படி மாற்றுகின்றார் என்பதை மனிதர்கள் பாவம் தெரிந்திருக்க வில்லை. ஏனென்றால் அவர்களுக்கு ஞானத்தின் மூன்றாவது கண்ணே இல்லை. குழந்தைகளாகிய உங்களுக்கு இப்போது ஞானத்தின் மூன்றாவது கண் கிடைத் திருக்கிறது. இதன்மூலம் நீங்கள் சிருஷ்டியின் முதல், இடை, கடைசியை தெரிந்து கொண்டீர்கள். இந்த ஞானம் சாக்ரின் (மிகவும் இனிமையானது) ஆகும். சாக்ரினின் ஒரு துளி கூட எவ்வளவு இனிமையானதாக இருக்கிறது! ஞானத்தின் ஒரே வார்த்தை மன்மனாபவ என்பதாகும். இந்த வார்த்தை எவ்வளவு இனிமையானதாக இருக்கிறது. தங்களை ஆத்மா என்று புரிந்து கொண்டு பாபாவை நினைவு செய்யுங்கள். பாபா சாந்திதாமம் மற்றும் சுகதாமத்திற்கான வழியை சொல்லிக் கொண்டிருக்கிறார். பாபா குழந்தைகளுக்கு சொர்க்கத்தின் ஆஸ்தியை கொடுப்பதற்காக வந்துள்ளார். எனவே குழந்தைகளுக்கு எவ்வளவு குஷி இருக்க வேண்டும்! குஷியை போன்ற டானிக் இல்லை என்றும் சொல்கிறார்கள். யார் எப்போதும் குஷியாக இருக்கிறார்களோ அவர் களுக்கு அது டானிக்கைப் போலாகிவிடுகிறது. 21 பிறவிகளுக்கு மகிழ்ச்சியாக இருப்பதற்கான நல்ல டானிக்காக இருக்கிறது. இந்த டானிக்கை ஒருவர் மற்றவருக்கு எப்போதும் கொடுத்துக் கொண்டே இருங்கள். இது ஒருவர் மற்றவருக்கான பலத்த உபசரிப்பாகும். இப்படிப்பட்ட உபசரிப்பை வேறு எந்த மனிதனும் மற்ற மனிதனுக்கு செய்ய முடியாது.

குழந்தைகளாகிய நீங்கள் ஸ்ரீமத்படி அனைவருக்கும் ஆன்மீக உபசரிப்பு

செய்கிறீர்கள். யாருக்கும் பாபாவின் அறிமுகத்தை அளிப்பது தான் உண்மையிலும் உண்மையான நலம் விரும்புவதாகும். பாபாவின் மூலம் நமக்கு ஜீவன் முக்தியின் பரிசு கிடைக்கிறது என்பதை இனிமையான குழந்தை கள் தெரிந்துள்ளார்கள். சத்யுகத்தில் பாரதம் சொர்க்கமாக இருந்தது (ஜீவன் முக்தி நிலையில் இருந்தது), தூய்மையானதாக இருந்தது. பாபா மிகப் பெரிய உயர்ந்த டானிக் கொடுக்கின்றார். ஆகையினால் தான் அதீந்திரிய சுகத்தைப் பற்றி கேட்க வேண்டும் என்றால் கோப- கோபியர் களிடம் கேளுங்கள் என்று பாடப்பட்டுள்ளது. இது ஞானம் மற்றும் யோகத்தின் எவ்வளவு நல்ல அதிசயமான டானிக்காக இருக்கிறது, மேலும் இந்த டானிக் ஒரே ஒரு ஆன்மீக டாக்டரிடம் தான் இருக்கிறது. வேறு யாருக்கும் இந்த டானிக்கைப் பற்றி தெரியவே தெரியாது. இனிமையான குழந்தைகளே, உங்களுக்காக கைகளில் பரிசு கொண்டு வந்திருக்கின்றேன் என்று பாபா கூறுகின்றார். முக்தி, ஜீவன்முக்தியின் இந்தப் பரிசு என்னிடம் மட்டுமே இருக்கிறது. கல்பம்-கல்பமாக நான் தான் வந்து உங்களுக்கு இந்த பரிசை கொடுக்கின்றேன் பிறகு இராவணன் அபகரித்துக் கொள்கின்றான். எனவே இப்போது குழந்தைகளாகிய உங்களுக்கு குஷியின் அளவு எவ்வளவு அதிகமாக இருக்க வேண்டும்! நமக்கு ஒரேயொரு தந்தை, டீச்சர் மற்றும் உண்மையிலும் உண்மையான சத்குரு தான் இருக்கின்றார், அவர் நம்மை தன்னுடன் அழைத்துச் செல்கின்றார் என்பதை நீங்கள் தெரிந்துள்ளீர்கள். மிகவும் அன்பான தந்தையிடமிருந்து உலகத்தின் இராஜ்யம் கிடைக்கிறது. இது குறைந்த விசயமா என்ன! குழந்தைகள் எப்போதும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். இறை மாணவ வாழ்க்கை தான் சிறந்ததாகும். இது இப்போதைய காலத்தின் புகழ் அல்லவா! பிறகு புதிய உலகத்தில் நீங்கள் எப்போதும் மகிழ்ச்சியை கொண்டாடிக் கொண்டே இருப்பீர்கள். உண்மையிலும் உண்மையான குஷி எப்போது கொண்டாடப்படும் என்பதை உலகம் தெரிந்திருக்க வில்லை. மனிதர்களுக்கு சத்யுகத்தைப் பற்றிய ஞானமே இல்லை எனும்போது இங்கேயே கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்த பழைய தமோபிரதான உலகத்தில் குஷி எங்கிருந்து வந்தது! இங்கே காப்பாற்றுங்கள் காப்பாற்றுங்கள் என்று கூக்குர-டுகின்றனர். எவ்வளவு துக்கம் நிறைந்த உலகமாக இருக்கிறது!

பாபா குழந்தைகளாகிய உங்களுக்கு எவ்வளவு சகஜமான வழியை கூறுகின்றார்! குடும்ப விவகாரங்களில் இருந்து கொண்டே தாமரை மலருக்குச் சமமாக இருங்கள். வேலை - தொழில் போன்றவற்றை செய்து கொண்டே என்னை நினைவு செய்து கொண்டே இருங்கள். எப்படி பிரியதர்ஷன் பிரியதர்ஷினிகள் இருக்கிறார்கள், அவர்கள் ஒருவர் மற்றவரை நினைவு செய்து கொண்டே இருக்கிறார்கள். அவர் இவருடைய பிரியதர்ஷினி, இவர் அவருடைய பிரியதர்ஷனாக இருக்கின்றனர். இங்கே அந்த விஷயம் இல்லை, இங்கே நீங்கள் அனைவரும் ஒரு பிரியதர்ஷனுக்கு பிறவி-பிறவிகளாக பிரியதர்ஷினிகளாக இருந்து கொண்டிருக்கிறீர்கள். பாபா ஒருபோதும் உங்களுக்கு பிரியதர்ஷினியாக ஆவதில்லை. நீங்கள் அந்த பிரியதர்ஷன் வருவதற் காக நினைவு செய்து வந்துள்ளீர்கள். துக்கம் அதிகமாகும்போது அதிகமாக நினைவு செய்கிறீர்கள், ஆகையினால் தான் துக்கத்தில் அனைவரும் நினைவு செய்வார்கள், சுகத்தில் யாரும் நினைவு செய்வதில்லை என்று பாடப்பட்டுள்ளது. இந்த சமயத்தில் பாபா சர்வசக்திவானாக இருக்கின்றார். நாளுக்கு நாள் மாயையும் சர்வசக்திவானாக, தமோபிரதானமாக ஆகிக்

கொண்டே செல்கிறது ஆகையினால் இப்போது பாபா கூறுகின்றார், இனிமையான குழந்தைகளே! ஆத்ம-அபிமானியாக ஆகுங்கள். தங்களை ஆத்மா என்று புரிந்து பாபாவை நினைவு செய்யுங்கள் மேலும் தெய்வீக குணத்தை கூடவே தாரணை செய்யுங்கள், அப்போது நீங்கள் இப்படி இலஷ்மி - நாராயணனாக ஆகி விடுவீர்கள். இந்தப் படிப்பில் முக்கியமான விஷயமே நினைவு ஆகும். உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தையை மிகவும் அன்போடு, சினேகத்தோடு நினைவு செய்ய வேண்டும். அந்த உயர்ந்த திலும் உயர்ந்த பாபா தான் புதிய உலகத்தை ஸ்தாபனை செய்யக்கூடியவராவார். நான் குழந்தை களாகிய உங்களை உலகத்திற்கு எஜமானர்களாக மாற்ற வந்துள்ளேன் ஆகையினால் இப்போது என்னை நினைவு செய்தீர்கள் என்றால் உங்களுடைய அனேக பிறவி களினுடைய பாவங்கள் அழிந்து விடும் என்று பாபா கூறுகின்றார். நீங்கள் மிகவும் தூய்மையற்றவர்களாக ஆகி விட்டீர்கள். ஆகையினால் இப்போது என்னை நினைவு செய்தீர்கள் என்றால் நீங்கள் தூய்மையாக ஆகி விடுவீர்கள் மேலும் தூய்மையான உலகத்திற்கு எஜமானர்களாக ஆகி விடுவீர்கள் என்று தூய்மை யற்றவர்களை தூய்மையாக்கும் பாபா கூறுகின்றார். தூய்மையற்றவர்களைத் தூய்மையாக்கும் பாபாவைத் தான் அழைக்கிறார்கள் அல்லவா! இப்போது பாபா வந்திருக்கின்றார் என்றால் கண்டிப்பாக தூய்மையாக ஆக வேண்டும். பாபா துக்கத்தைப் போக்குபவர், சுகத்தை வழங்கு பவராக இருக்கின்றார். சரியாக சத்யுகத்தில் தூய்மையான உலகமாக இருந்தது எனும்போது அனைவரும் சுகமாகத் தான் இருந்தார்கள். இப்போது பாபா மீண்டும் கூறுகின்றார் குழந்தைகளே, சாந்திதாமம் சுகதாமத்தை நினைவு செய்து கொண்டே இருங்கள். இப்போது சங்கமயுகமாகும். படகோட்டி உங்களை இக்கரையிலிருந்து அக்கரைக்கு அழைத்துச் செல்கின்றார். ஒரு படகு மட்டும் இல்லை, முழு உலகமும் ஒரு பெரிய கப்பலைப் போல் இருக்கிறது. அதனை அக்கரைக்கு கொண்டு சேர்க்கின்றார்.

இனிமையிலும் இனிமையான குழந்தைகளாகிய உங்களுக்கு எவ்வளவு குஷி இருக்க வேண்டும்! உங்களுக்கு எப்போதும் குஷியே குஷி தான். ஆஹா, எல்லையற்ற தந்தை நமக்கு படிப்பித்துக் கொண்டிருக்கின்றார். இதை எப்போதும் கேட்டதும் இல்லை, படித்ததும் இல்லை. பகவானுடைய மகாவாக்கியம், நான் ஆன்மீகக் குழந்தைகளாகிய உங்களுக்கு இராஜயோகம் கற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கின்றேன். எனவே முழுமையாக நன்றாக கற்றுக் கொள்ள வேண்டும், தாரணை செய்ய வேண்டும். முழுமையான விதத்தில் படிக்க வேண்டும். படிப்பில் எப்போதும் வரிசை கிரமம் என்பது இருக்கத்தான் செய்கிறது. தங்களைப் பார்க்க வேண்டும், நான் உயர்ந்த நிலையில் இருக்கின்றேனா, இடையிலா அல்லது தாழ்ந்த நிலையில் இருக்கின்றேனா? நான் உயர்ந்த பதவி அடைவதற்கு தகுதியானவனாக இருக்கின்றேனா, என்று தங்களைப் பாருங்கள் என்று பாபா கூறுகின்றார். ஆன்மீக சேவை செய்கின்றேனா? ஏனென்றால், குழந்தைகளே சேவாதாரியாக ஆகுங்கள், பாபாவை பின்பற்றுங்கள் என்று பாபா கூறுகின்றார். சேவைக்காகவே நான் வந்துள்ளேன். தினமும் சேவை செய்கின்றேன் ஆகையினால் தான் இந்த இரதத்தை எடுத்திருக் கின்றேன். இவருடைய இரதத்திற்கு நோய் வந்து விட்டால் நான் இவருக்குள் அமர்ந்து முரளியை எழுதுகின்றேன். வாயினால் சொல்ல முடியவில்லை என்றால் நான் எழுதி விடுகின்றேன். குழந்தைகளுக்கு

முரளி தவறிவிடக் கூடாது என்பதற்காக, ஆக நானும் சேவையில் இருக்கின்றேன் அல்லவா! இது தான் ஆன்மீக சேவையாகும். எனவே குழந்தைகளாகிய நீங்களும் கூட பாபாவின் சேவையில் ஈடுபடுங்கள். இறை தந்தையின் சேவையில் இருங்கள். யார் நன்றாக முயற்சி செய்கிறார்களோ, யார் நன்றாக சேவை செய்கிறார்களோ, அவர்கள் மகாவீர் என்றழைக்கப்படுகிறார்கள். பாபாவின் வழிகாட்டுதலின் படி நடக்கக்கூடியவர்கள் யார் என்று பார்க்கப் படுகிறது. பாபாவின் கட்டளை-தங்களை ஆத்மா என்று புரிந்து சகோதர-சகோதரர்கள் என்று பாருங்கள். இந்த சரீரத்தை மறந்து விடுங்கள். பாபாவும் கூட சரீரத்தைப் பார்ப்பதில்லை. நான் ஆத்மாக்களைப் பார்க்கின்றேன் என்று பாபா கூறுகின்றார். மற்றபடி இது ஞானமாகும், ஆத்மா சரீரம் இல்லாமல் பேச முடியாது. நான் இந்த சரீரத்தில் வந்துள்ளேன், கடனாகப் பெற்றிருக்கின்றேன். சரீரத்தோடு தான் ஆத்மா படிக்க முடியும். பாபா இங்கே இரு புருவங்களுக்கு மத்தியில் அமர்ந்திருக்கிறார். இது அழிவற்ற சிம்மாசனமாகும். ஆத்மா அழிவற்ற மூர்த்தி யாகும். ஆத்மா ஒருபோதும் சிறியதாகவோ பெரியதாகவோ ஆவதில்லை. சரீரம் சிறியதாக - பெரியதாக ஆகிறது. ஆத்மாக்கள் அனைத்திற்கும் சிம்மாசனம் இந்த புருவமையமாகும். சரீரம் அனைவருக்கும் வித-விதமாக இருக்கிறது. சிலருடைய அழிவற்ற சிம்மாசனம் ஆணினுடையதாக இருக்கிறது, சிலருடைய அழிவற்ற சிம்மாசனம் பெண்ணினுடையதாக இருக்கிறது, சிலருடைய அழிவற்ற சிம்மாசனம் குழந்தையினுடையதாக இருக்கிறது. பாபா அமர்ந்து குழந்தைகளுக்கு ஆன்மீகப் (டிரில்) பயிற்சியை கற்றுக் கொடுக்கின்றார். யாரிடமாவது பேசுகின்றீர்கள் என்றால் முதலில் தங்களை ஆத்மா என்று புரிந்து கொள்ளுங்கள். ஆத்மாவாகிய நான் இந்த சகோதரனிடம் பேசுகின்றேன். சிவபாபாவை நினைவு செய்யுங்கள் என்று பாபாவின் அறிமுகத்தைக் கொடுக் கின்றேன். நினைவின் மூலம் தான் துரு இறங்க வேண்டும். தங்கத்தில் மற்ற உலோகங்கள் சேருகிறது என்றால் தங்கத்தின் மதிப்பு குறைந்து விடுகிறது. ஆத்மாக்களாகிய உங்களிடத்தில் கூட துரு (அவகுணங்கள்) சேரும்போது நீங்கள் மதிப்பற்றவர்களாக ஆகி விடுகிறீர்கள். இப்போது மீண்டும் தூய்மையாக ஆக வேண்டும். ஆத்மாக்களாகிய உங்களுக்கு இப்போது ஞானத்தின் மூன்றாவது கண் கிடைத்திருக்கிறது. அந்த கண்களின் மூலம் தங்களுடைய சகோதரர்களைப் பாருங்கள். சகோதர- சகோதரன் என்று பார்ப்பதின் மூலம் கர்மேந்திரியங்கள் சஞ்சலப்படாது. இராஜ்ய பாக்கியத்தை அடைய வேண்டும், உலகத்திற்கு எஜமானர்களாக ஆக வேண்டும் என்றால் இந்த உழைப்பில் ஈடுபடுங்கள். சகோதர-சகோதரன் என்று புரிந்து அனைவருக்கும் ஞானத்தைக் கொடுங்கள். பிறகு இந்தப் பழக்கம் உறுதியாகி விடும். நீங்கள் தான் உண்மையிலும் உண்மை யான சகோதரர்கள் ஆவீர்கள். பாபாவும் மேலிருந்து வந்துள்ளார், நீங்களும் மேலேயிருந்து வந்துள்ளீர்கள். பாபா குழந்தைகள் சகிதமாக சேவை செய்து கொண்டிருக்கின்றார். பாபா சேவை செய்வதற்கான தைரியமளிக்கின்றார். தைரியமுள்ள குழந்தைகளுக்கு பாபாவின் உதவி இருக்கிறது......... எனவே இந்தப் பயிற்சியை செய்ய வேண்டும். ஆத்மாவாகிய நான் சகோதரனுக்குப் படிப்பிக்கின்றேன். ஆத்மா படிக்கிறது அல்லவா! இதனை ஆன்மீக ஞானம் என்று சொல்லப்படுகிறது, இது ஆன்மீகத் தந்தையிடமிருந்து தான் கிடைக்கிறது. தங்களை ஆத்மா என்று புரிந்து கொள்ளுங்கள் என்ற இந்த ஞானத்தை பாபா சங்கமயுகத்தில் வந்து தான் கொடுக்கின்றார். நீங்கள் ஆடையின்றி (சரீரம்) வந்தீர்கள் பிறகு இங்கே சரீரத்தை எடுத்து நீங்கள் 

பிறவிகளின் நடிப்பை நடித்தீர்கள். இப்போது திரும்பிச் செல்ல வேண்டும் ஆகையினால் தங்களை ஆத்மா என்று புரிந்து சகோதர-சகோதரர்கள் என்ற பார்வையில் பார்க்க வேண்டும். இந்த பயிற்சியை செய்ய வேண்டும். தங்களுடைய முயற்சியை செய்து கொண்டிருக்க வேண்டும், மற்றவர்களைப் பற்றி நமக்கென்ன ஆயிற்று ? நன்மை வீட்டிலிருந்து ஆரம்பமாக வேண்டும் அதாவது முதலில் தன்னை ஆத்மா என்று புரிந்து பிறகு சகோதரர்களுக்குப் புரிய வையுங்கள். அப்போது நன்றாக அம்பு தைக்கும். இந்தவொரு கூர்மையை நிரப்ப வேண்டும். உழைத்தால் தான் உயர்ந்த பதவி அடைய முடியும். இதில் கொஞ்சம் சகித்துக் கொள்ளவும் வேண்டியிருக்கிறது. யாராவது ஏதாவது தலைகீழான விசயங்களைப் பேசுகிறார்கள் என்றால் நீங்கள் அமைதியாக இருங்கள். நீங்கள் அமைதியாக இருந்தீர்கள் என்றால் மற்றவர்கள் என்ன செய்ய முடியும்? இரண்டு கைகள் சேர்ந்தால் தான் ஓசை வரும் அல்லவா! ஒருவர் வாயால் திட்டினால், மற்றொருவர் அமைதியாக இருந்தால் அவர் தானாகவே அமைதியாகிவிடுவார். கையோடு கை தட்டினால் ஓசை எழும். குழந்தைகள் ஒருவர் மற்றவருக்கு நன்மை செய்ய வேண்டும். குழந்தைகளே எப்போதும் குஷியாக இருக்க வேண்டுமா? மன்மனாபவ என்று இருங்கள் என்று பாபா புரிய வைக்கின்றார். தங்களை ஆத்மா என்று புரிந்து தந்தையை நினைவு செய்யுங்கள். சகோதரர்களின் (ஆத்மாக் களின்) பக்கம் பாருங்கள். எனவே குழந்தைகள் ஆன்மீக யாத்திரையில் இருப்பதற்கான பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும். இது உங்களுடைய நன்மைக்கான விஷயமே ஆகும். தந்தையின் படிப்பினைகளை சகோதரர்களுக்கும் கொடுக்க வேண்டும். நான் ஆத்மாக்களாகிய உங்களுக்கு ஞானத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றேன். ஆத்மாவைத் தான் பார்க்கின்றேன் .மனிதர்கள்- மனிதர்களோடு பேசுகிறார்கள் எனும்போது அவர்களுடைய வாயைத் தான் பார்ப்பார்கள் அல்லவா! நீங்கள் ஆத்மாக்களிடம் பேசுகிறீர்கள் எனும்போது ஆத்மாவைத் தான் பார்க்க வேண்டும். சரீரத்தின் மூலம் ஞானம் கொடுக்கலாம் ஆனால் இதில் தேக உணர்வை நீக்க வேண்டும். பரமாத்மா தந்தை நமக்கு ஞானம் கொடுத்துக் கொண்டிருக்கின்றார் என்று உங்களுடைய ஆத்மா புரிந்து கொள்கிறது. பாபாவும் நான் ஆத்மாக்களைப் பார்க்கின்றேன் என்று கூறுகின்றார், ஆத்மாக்களும் கூட நாங்கள் பரமாத்மா தந்தையை பார்த்துக் கொண்டிருக்கின்றோம் என்று கூறுகின்றன. அவரிடமிருந்து ஞானத்தைப் பெற்றுக் கொண்டிருக்கிறோம், இதைத்தான் ஆத்மா ஆத்மாவோடு கொடுக்கல்-வாங்கல் என்று சொல்லப்படுகிறது. ஆத்மாவில் தான் ஞானம் இருக்கிறது. ஆத்மாவிற்குத் தான் ஞானத்தைக் கொடுக்க வேண்டும். இது கூர்மை போன்றதாகும். உங்களுடைய ஞானத்தில் இந்த கூர்மை நிரம்பி விடும். எனவே யாருக்கும் புரிய வைத்தால் உடனே அம்பு தைத்து விடும். பயிற்சி செய்து பாருங்கள், அம்பு தைக்கிறது அல்லவா! என்று பாபா கேட்கின்றார். இந்த புதிய பழக்கத்தை ஏற்படுத்தினீர்கள் என்றால் பிறகு தேக உணர்வு நீங்கி விடும். மாயையின் புயல் குறைவாக வரும். கெட்ட எண்ணங்கள் வராது. குற்றப்பார்வையும் இருக்காது. ஆத்மாக்களாகிய நாம் 84 பிறவிகளின் சக்கரத்தைச் சுற்றியுள்ளோம். இப்போது நாடகம் முடிகிறது. இப்போது பாபாவின் நினைவில் இருக்க வேண்டும். நினைவின் மூலம் தான் தமோபிர தானத்திலிருந்து சதோபிரதானமாக ஆகி, சதோபிரதான உலகத்திற்கு எஜமானர்களாக ஆவோம். எவ்வளவு சகஜமான விஷயமாக இருக்கிறது. குழந்தைகளுக்கு இந்தப் படிப்பினையை கொடுப்பது கூட என்னுடைய நடிப்பு என்பதை பாபா தெரிந்திருக்கிறார். ஒன்றும் புதிய விஷயம் இல்லை. ஒவ்வொரு

5000 ஆண்டுகளுக்குப் பிறகும் நான் வர வேண்டியிருக்கிறது. நான் நாடகத்தில் கட்டுப்பட்டிருக்கின்றேன். இனிமையான குழந்தைகளே! ஆன்மீக நினைவு யாத்திரையில் இருந்தீர் கள் என்றால் கடைசியில் புத்தியில் என்ன இருக்கிறதோ அதன்படி அடுத்த பிறவியில் நிலை ஏற்பட்டு விடும். இது கடைசி காலம் அல்லவா! என்னை மட்டும் நினைவு செய்தீர்கள் என்றால் உங்களுக்கு சத்கதி ஏற்பட்டு விடும். நினைவு யாத்திரையின் மூலம் கால்கள் உறுதியாகி விடும். இந்த ஆத்ம-அபிமானியாக ஆவதற்கான படிப்பினை ஒரு முறை தான் குழந்தைகளாகிய உங்களுக்கு கிடைக்கிறது. எவ்வளவு அதிசயமான ஞானமாக இருக்கிறது. பாபா அதிசயமானவர் என்றால் பாபாவின் ஞானமும் அதிசயமானதாக இருக்கிறது! ஒருபோதும் யாரும் சொல்ல முடியாது. இப்போது திரும்பிச் செல்ல வேண்டும் ஆகையினால் பாபா கூறுகின்றார், இனிமையான குழந்தைகளே! இந்தப் பயிற்சியை செய்யுங்கள். தங்களை ஆத்மா என்று புரிந்து ஆத்மாவிற்கு ஞானம் கொடுங்கள். மூன்றாவது கண்ணின் மூலம் சகோதரன்- சகோதரனைப் பார்க்க வேண்டும். இது தான் பெரிய உழைப்பாகும்.

இது தான் பிராமணர்களாகிய உங்களுடைய சர்வ உத்தமமான உயர்ந்ததிலும் உயர்ந்த குலமாகும். இந்த சமயத்தில் உங்களுடைய வாழ்க்கை மதிப்பு மிக்கதாக இருக்கிறது. ஆகையினால் இந்த சரீரத்தையும் கூட பாதுகாக்க வேண்டும். தமோபிரதானமாக இருக்கின்ற காரணத்தினால் சரீரத்தின் ஆயுள் கூட குறைந்து கொண்டே செல்கிறது. இப்போது நீங்கள் எந்தளவிற்கு யோகத் தில் இருப்பீர்களோ, அந்தளவிற்கு ஆயுள் அதிகரிக்கும். உங்களுடைய ஆயுள் அதிகரித்து-அதிகரித்து சத்யுகத்தில் 150 ஆண்டுகளாகிவிடும், ஆகையினால் சரீரத்தையும் கூட பாதுகாக்க வேண்டும். இது மண்ணால் ஆன பொம்மை, இது எப்படியாவது அழிந்து போகட்டும் என்பது இல்லை. இதை உயிர்வாழ வைக்க வேண்டும். இது மதிப்புமிக்க வாழ்க்கை அல்லவா! யாராவது நோயுறுகிறார்கள் என்றால் அவர்களிடம் சலித்துக்கொள்ளக் கூடாது. அவர்களுக்கும் கூட சிவபாபாவை நினைவு செய்யுங்கள் என்று சொல்ல வேண்டும். எந்தளவிற்கு நினைவு செய்வார்களோ, அந்தளவிற்கு அவர்களுடைய பாவங்கள் அழிந்து கொண்டே செல்லும். அவர்களுக்கு சேவை செய்ய வேண்டும். உயிர் வாழட்டும், சிவபாபாவை நினைவு செய்து கொண்டே இருக்கட்டும். நாம் சிவபாபாவை நினைவு செய்கின்றோம் என்ற புரிதல் இருக்கிறது அல்லவா! பாபாவிடமிருந்து ஆஸ்தியை அடைவதற்கு ஆத்மா நினைவு செய்கிறது. நல்லது!

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமான பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் காலை வணக்கமும். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1) நான் முயற்சியில் உயர்ந்த நிலையில் இருக்கிறேனா, மத்திம நிலையில் இருக்கின்றேனா அல்லது கீழான நிலையில் இருக்கின்றேனா? நான் உயர்ந்த பதவியை அடைவதற்கு தகுதியானவனாக இருக்கின்றேனா? நான் ஆன்மீக சேவை செய்கின்றேனா? என்று தன்னைப் பாருங்கள்.

2) மூன்றாவது கண்ணின் மூலம் ஆத்மா சகோதரனைப் பாருங்கள், சகோதர-சகோதரன் என்று புரிந்து அனைவருக்கும் ஞானத்தைக் கொடுங்கள்,

ஆத்மீக நிலையில் நிலைத்திருப் பதற்கான பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டீர்கள் என்றால் கர்மேந்திரியங்கள் நிலையில் தடுமாற்றம் அடையாது.

வரதானம் : பிரம்மா பாபாவைப் போன்று மகா தியாகத்தின் மூலம் மகான் பாக்கியத்தை உருவாக்கக் கூடிய பரிஸ்தா மற்றும் உலக மகாராஜா ஆகுக.

யார் பிரம்மா பாபாவின் ஒவ்வொரு செயல் என்ற அடியின் பின்னால் அடி எடுத்து வைக்கிறார்களோ, யார் தனது மனம்-புத்தி-சன்ஸ்காரத்தை சதா தந்தையிடம் அர்ப்பணித்திருக் கிறார்களோ, அந்த குழந்தைகளுக்குத் தான் பரிஸ்தாவி-ருந்து உலக மகாராஜா ஆவதற்கான வரதானம் பிராப்தியாக கிடைக்கிறது. பிரம்மா பாபா இந்த மகா தியாகத்தின் மூலம் தான் மகான் பாக்கியத்தை அடைந்தார், அதாவது நம்பர் ஒன் சம்பூர்ன பரிஸ்தா மற்றும் நம்பர் ஒன் உலக மகாராஜா ஆனார். இவ்வாறு தந்தையை பின்பற்றக் கூடிய குழந்தைகளும் கூட மகான் தியாகம் அல்லது சர்வஸ்வ தியாகியாக இருப்பர். சன்ஸகாரத்திலும் கூட விகாரத்தின் வம்சத்தை தியாகம் செய்வார்கள்.

சுலோகன்: இப்பொழுது அனைத்து ஆதாரங்களும் துண்டிக்கப்பட இருக்கிறது. ஆகையால் ஒரு தந்தையை தனது ஆதாரமாக ஆக்கிக் கொள்ளுங்கள்.

தனது சக்திசாலியான மனதின் மூலம் சக்தி கொடுக்கும் சேவை செய்யுங்கள்:

முழு இயற்கையையும் மாற்ற வேண்டும், தமோ குண சன்ஸ்காரமுடைய ஆத்மாக்களின் தமோ குண வைபிரேசனை மாற்ற வேண்டும் மற்றும் தன்னையும் அப்படிப்பட்ட வாயுமண்டலம், சூழ்நிலையிலிருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டும், அந்த ஆத்மாக்களுக்கு உதவி செய்ய வேண்டும் - இந்த விசால காரியத்திற்கு மனதை சுப பாவனை நிறைந்த சக்திசாலியாக ஆக்குங்கள்.